සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province

අවසාන වාර පරීක්ෂණය - 2024 (2025)
இறுதி தவணைப் பரீட்சை - 2024 (2025) / **Year End Term Test - 2024 (2025)**

ශ්‍රේණිය / தரம் / Grade } **09**

# வரலாறு

කාලය / நேரம் / Time } 02 மணி

නම / பெயர் / Name } ..........................................................................

විභාග අංකය / சுட்டிலக்கம் / Index No. } ..........................................

பகுதி I

❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

❖ 1 – 5 வரையான வினாக்களுக்கான விடைகளை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.

1) ஒல்லாந்தர்களின் கீழைத்தேய தலைமைக் காரியாலயம் .................................................... ஆகும்.
(கோவா / பத்தேவியா)

2) போர்த்துக்கேயரை விரட்டுவதற்காக ஒல்லாந்தர்களின் உதவியை .................................................... மன்னன் பெற்றுக் கொண்டான். (இரண்டாம் இராஜசிங்கன் / முதலாம் இராஜசிங்கன்)

3) ஆரம்ப காலத்தில் இயற்கையாக வளரும் .................................................... பயிருக்கு பொருளாதார பெறுமதியை வழங்கியவர்கள் ஒல்லாந்தர் ஆவார். (கறுவா / கோப்பி)

4) கொழும்பு ஸாஹிரா கல்லூரியின் அதிபரான ........................................................... அவர்கள் கல்லூரியின் முன்னேற்றத்திற்காக முயற்சித்தார். (டீ.பி.ஜாயா / சித்திலெப்பை)

5) "சாம்பரட் இயக்கம்", "கேடா இயக்கம்", "வெள்ளையனே வெளியேறு" போன்ற இயக்கங்களுக்கு ........................................................................... அவர்கள் தலைமை தாங்கினார்.
(ஜவஹர்லால் நேரு / மகாத்மா காந்தி)

❖ 6 – 10 வரையான கூற்றுக்கள் சரியெனில் (✓) அடையாளத்தையும், பிழையெனில் (×) அடையாளத்தையும் அடைப்புக்குறிக்குள் இடுக.

6) ஆங்கிலேயருக்கு இலங்கையின் திருகோணமலை துறைமுகம் மிக முக்கியமானதாக இருந்தது. ( )

7) கி.பி.1848 சுதந்திரப் போராட்டத்திற்கு கெப்பட்டிபொல திசாவை தலைமை தாங்கினார். ( )

8) இலங்கையின் தென்னை ஆராய்ச்சி நிலையம் லுணுவிலவில் அமைந்துள்ளது. ( )

9) ஜூலியன் வாலா பாக் படுகொலைச் சம்பவம் 1920ம் ஆண்டு நடைபெற்றது. ( )

10) இலங்கை சமசமாஜ சங்கத்தின் முதலாவது தலைவராக பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். ( )

❖ 11 – 20 வரையான வினாக்களில் சரியான விடையின் கீழ் கோடிடுக.

11) பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் கீழ் பஞ்ச மகா விவாதத்தை தலைமை தாங்கி நடாத்தியவர்,

1. ஹிக்கடுவ சிறீ சுமங்கல தேரர்
2. வஸ்கடுவே சுபூதி தேரர்
3. மீகெட்டுவத்தே குணாநந்த தேரர்
4. இரத்மலானே தர்மாலோக தேரர்

12) இந்தியாவின் முகலாய இராசதானி வீழ்ச்சியடைந்தது எந்த ஆட்சியாளன் காலத்திலாகும் ?

1. முதலாம் அக்பர் மன்னன் 2. ஷாஜஹான் மன்னன்

3. ஜஹங்கீர் மன்னன் 4. ஔரங்கசீப் மன்னன்

13) பிரித்தானியரினால் உள்நாட்டு வருமானத்தை அதிகரிக்க எடுத்த தீர்மானங்களில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் வளர்ச்சிக்காக எடுக்கப்பட்ட தீர்மானம் யாது ?

1. மலையகத்தையும் கரையோரத்தையும் இணைத்தல்.
2. அரசின் சில திணைக்களங்களை மூடிவிடல்.
3. நீதிமன்றத் தொகுதியை அமைத்தல்.
4. அரச காணிகளை விற்பனை செய்தல்.

14) கி.பி.1815ல் மலையகத்தை ஆங்கிலேயர் கைப்பற்றிக் கொள்வதற்கான பின்னணியை உருவாக்கிய அரச அதிகாரி யார் ?

1. ஜோன் டொயிலி 2. முத்துசாமி 3. மெக்டொவல் பிரபு 4. பிரட்ரிக் நோர்த்

15) பிரித்தானிய குடியேற்றங்களில் முதல்முதலாக வாக்குரிமையை பெற்றுக் கொண்ட ஆசியாக் கண்ட நாடு எது ?

1. இந்தியா 2. இலங்கை 3. பாகிஸ்தான் 4. பங்களாதேஷ்

16) பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் ஆளுநர் பதவி நீக்கப்பட்டு ஆளுநர் நாயகம் பதவி உருவாக்கப்பட்டது எந்த அரசியல் அமைப்பின் மூலமாகும் ?

1. கி.பி.1833 கோல்புறூக் சீர்த்திருத்தம் 2. கி.பி.1920 மனிங் சீர்த்திருத்தம்

3. கி.பி.1931 டொனமூர் சீர்த்திருத்தம் 4. கி.பி.1947 சோல்பரி சீர்த்திருத்தம்

17) சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமர் யார் ?

1. S.W.R.D.பண்டாரநாயக்க 2. D.S.சேனாநாயக்க

3. டட்லி சேனாநாயக்க 4. J.R.ஜயவர்தன

18) 1978 இரண்டாம் குடியரசு யாப்பின் மூலம் அமைக்கப்பட்ட பாரளுமன்றத்தின் அங்கத்தவர் தொகை யாது ?

1. 196 ஆகும் 2. 168 ஆகும் 3. 225 ஆகும் 4. 200 ஆகும்

19) இலங்கையின் விவசாயத்தை முன்னேற்றுவதற்காக விவசாய குடியேற்றத் திட்டங்களை ஆரம்பித்து வைத்தவர் யார் ?

1. D.S.சேனாநாயக்க 2. J.R.ஜயவர்தன 3. காமினி திசாநாயக்க 4. ஏ.அமிர்தலிங்கம்

20) தற்கால இலங்கையின் அதியுயர் நீதிமன்றம் யாது ?

1. உயர் நீதிமன்றம் 2. மேன்முறையீட்டு நீதிமன்றம்

3. மாவட்ட நீதிமன்றம் 4. உச்ச நீதிமன்றம்

($2 \times 20 = 40$ புள்ளிகள்)

Past Papers Wiki

பகுதி II

- முதலாம் வினா கட்டாயமானது.
- மேலும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.
- மொத்தம் ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க வேண்டும்.

01) (அ) தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தில் குறிக்கப்பட்டுள்ள இடங்களுக்கு பொருத்தமான ஆங்கில எழுத்துக்களை தெரிவு செய்து விடைத்தாளில் எழுதுக. (06 புள்ளிகள்)

I. யாழ்ப்பாணம்
II. கற்பிட்டி
III. நீர் கொழும்பு
IV. மட்டக்களப்பு
V. பொலன்னறுவை
VI. செங்கடகல




(ஆ) I. இப்படத்தில் காட்டப்பட்டுள்ள நபர் யார் ?
II. இவர் ஆரம்பித்து வைத்த அரசியல் கட்சி யாது ?
III. 1956ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் இவருக்கு ஆதரவை பெற்றுக் கொடுத்த மக்கள் சக்தி யாது ?
(03 புள்ளிகள்)



(இ)
I. உருவில் காட்டப்படும் கட்டிடம் யாது ?
II. இதனை அமைத்தவர் யார் ?
III. இது அமைந்துள்ள நகரம் யாது ?
(03 புள்ளிகள்)



02) I. பின்வரும் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

A. "இஞ்சியை கொடுத்து மிளகாய் வாங்கியது போன்று" எனும் பழமொழியுடன் தொடர்புடைய மன்னன்
B. கி.பி.1766ல் மலையக மன்னனுடன் ஒப்பந்தம் கைச்சாத்திட்ட ஒல்லாந்த ஆளுநர்
C. 1796ல் ஆங்கிலேயர் இலங்கையின் கரையோரப் பகுதிகளை கைப்பற்றும் போது மலையக மன்னனாக இருந்து ஆட்சி செய்தவர் யார் ?

(கீர்த்தி சிறீ இராஜசிங்கன், பெரன் வேன் எக், இராஜாதி இராஜசிங்கன், வில்லியம் பலக், இரண்டாம் இராஜசிங்கன்) (03 புள்ளிகள்)

II. பின்வரும் மலையக மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கு வருகை தந்த ஒல்லாந்த தூதுக்குழுவினர்களின் பிரதானிகளை ஒழுங்கு வரிசையில் எழுதுக.

A. முதலாம் விமலதர்மசூரியன்

B. இரண்டாம் இராஜசிங்கன்

C. இரண்டாம் விமலதர்மசூரியன்

D. சிறீ வீர பராக்கிரம நரேந்திரசிங்கன்

(04 புள்ளிகள்)

III. இறக்குமதிச் செலவை கட்டுப்படுத்தல், மேலதிக வருமானத்தை பெற்றுக் கொள்ளல் போன்றனவற்றுக்காக ஒல்லாந்தர் மேற்கொண்ட வழிமுறைகளை உதாரணங்கள் மூன்றுடன் தெளிவுபடுத்துக. (05 புள்ளிகள்)

03) I. பிரித்தானியரின் கவனம் இலங்கை மீது ஏற்பட்டதற்கான காரணங்கள் மூன்றைக் குறிப்பிடுக.

(03 புள்ளிகள்)

II. பிரித்தானியர்களுக்கு எதிராக 1818ல் நடைபெற்ற கலவரத்துக்கான காரணங்கள் இரண்டை கூறுக. (04 புள்ளிகள்)

III. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில்,

A. கோப்பிச் செய்கை விருத்தியடைந்தமைக்கான காரணங்கள் மூன்றையும்,

B. 1848ல் பின் கோப்பிச் செய்கை வீழ்ச்சியுற்றமைக்கான காரணங்கள் இரண்டையும் குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

04) I. 19ம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் இலங்கைக்கு வருகை தந்த மிசனரி இயக்கங்கள் மூன்றைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

II. தேசிய மறுமலர்ச்சிக் காலத்தில் பின்வரும் பாடசாலைகளை கட்டியெழுப்புதற்காக முன்னணி நின்று உழைத்த தலைவர்களை குறிப்பிடுக.

A. கொழும்பு ஸாஹிரா கல்லூரி

B. சிவன்கல வித்தியலாம்

C. பரமேஸ்வரா கல்லூரி

D. கொழும்பு ஆனந்த வித்தியாலயம் (04 புள்ளிகள்)

III. தேசிய மறுமலர்ச்சிக் காலத்தில்,

A. ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் அவர்களின் சேவைகள் இரண்டையும்,

B. ஆறுமுகநாவலர் அவர்களின் சேவைகள் இரண்டையும்,

C. சித்திலெப்பை அவர்களின் சேவைகள் ஒன்றையும் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

05) I. இந்தியா தேசிய இயக்கத்தின் பின்வரும் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

A. ஆங்கில இராணுவ அதிகாரி ஒருவரை துப்பாக்கி மூலம் சுட்டுக் கொலை செய்த சிப்பாய்

B. இந்திய மத மறுமலர்ச்சிக்கு வித்திட்ட அறிஞன்

C. பாகிஸ்தான் என வேறு நாட்டை அமைக்க பாடுபட்டவர்

( பஹதுர்ஷாஅலிஜின்னா,மங்கள் பாண்டே, ராம் மோஹன் ராய், ஸீ.ஆர்.தாஸ், மகாத்மா காந்தி)

(03 புள்ளிகள்)

II. கி.பி.1857ல் சிப்பாய் கலகம் ஏற்பட்டதற்கான காரணங்கள் இரண்டை எழுதுக. (04 புள்ளிகள்)



සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki

III. இந்திய தேசிய சங்கம் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப காலத்தில்

A. அரசாங்கத்திடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் இரண்டையும்,

B. இந்திய அரசியலில் தெளிவாக அவதானிக்கக் கூடிய இலட்சணங்கள் மூன்றையும் குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

06) I. பின்வரும் பதவிகளுடன் தொடர்புடையவர்களை குறிப்பிடுக.

A. இலங்கையின் முதலாவது பிரதமர்

B. இலங்கையின் முதலாவது தேசாதிபதி

C. இலங்கையின் முதலாவது சபாநாயகர் (03 புள்ளிகள்)

II. கி.பி.1865ல் இலங்கையர் சங்கத்தை அமைக்க முன்னணி வகித்த இருவரையும் பெயரிடுக.

(04 புள்ளிகள்)

III. A. டொனமூர் சீர்த்திருத்தத்தில் பின்வரும் தலைவர்கள் இருவரின் கீழ் அமைக்கப்பட்ட நிர்வாகக் குழுக்கள் இரண்டையும் குறிப்பிடுக.

1. டீ.எஸ்.சேனாநாயக்க
2. C.W.W.கன்னங்கர

B. சோல்பரி யாப்பின் பிரதான இலட்சணங்கள் மூன்றை குறிப்பிட்டு அவற்றில் ஒன்றை சுருக்கமாக தெளிவுபடுத்துக. (05 புள்ளிகள்)

07) I. கி.பி.1978ல் அமைக்கப்பட்ட பாராளுமன்றத்தின் செயற்பாடுகள் மூன்றைக் குறிப்பிடுக.

(03 புள்ளிகள்)

II. A. கி.பி.1956 தேர்தலில் அமைக்கப்பட்ட அரசாங்கத்தின் வேலைத்திட்டங்கள் இரண்டையும்,

B. கி.பி.1978 யாப்பின் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருந்த நிறைவேற்று அதிகாரங்கள் இரண்டையும் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

III. சுதந்திரத்திற்குப் பின் ஆட்சிபீடமேறிய அரசு கல்வித்துறை முன்னேற்றத்திற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் மூன்றை குறிப்பிட்டு, அவற்றில் ஒன்றை விளக்குக. (05 புள்ளிகள்)

සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

LOL Book Store

වාරෙටම ඕන කරන පොත් එකපාර
ඕඩර් කරලා දැන් ගෙදරටම ගෙන්වා ගන්න

# 25% OFF ALL BOOKS

Including Exercise Books,
CR Books, and B5 Books



ඕනෙම අභ්‍යාස පොතකට 25%ක විශේෂ වට්ටමක්

## ORDER BOOKS FROM LOL BOOKS STORE

0372060110 WWW.LOL.LK

071 777 4440 (WhatsApp)

Cash On Delivery Available


Order Term Test Papers, Short Note Books, Work books, and Revision Books in Sinhala, English & Tamil Medium
TERM TEST
SHORT NOTES
REVISION
LOL BOOK STORE
Cash on Delivery and KOKO Payment Available
WhatsApp - 0717774440
Website: www.lol.lk
Order all your books from LOL Book Store!